**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
**(Chapter XXII, Cr.P.C.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 42 of 2023

Depositions of PW - 8 witness for ________ Prosecution / Defence / Court

Name : திரு. ஆர்.மாதையன்

Father's Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st **day of August** 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்பொழுது பல்லடம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.07.2021 ம் தேதி 22.45 மணிக்கு சூலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.ராஜேந்திரபிரசாத் அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது சாரதபிரித்தா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று வழக்கின் தன்மைப்படி சூலூர் காவல் நிலைய குற்ற எண்.720/2021 சட்டப்பிரிவு 392 இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் புகார்தாரர் சாட்சிகள் முன்னிலையில் ஆஜர் செய்த வழக்கு சொத்தை படிவம் 91ன் மூலமாக கைப்பற்றியுள்ளார். படிவம் 91 **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவினை இணைத்து நீதித்துறை நடுவர் சூலூர் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

2. அதன்பின்னர் வழக்கு கோப்பை புலன்விசாரணைக்கு எடுத்துகொண்ட காவல் ஆய்வாளர் திரு.சண்முகம் மற்றும் திரு.முருகேசன் அவர்கள் 13.07.2021 ம் தேதியன்று சம்பவ

இடம் சென்று சாட்சிகள் சுபாஷ் மற்றும் கிராந்திகுமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் சாரதாபிரித்தா, சுபாஷ், கிராந்திகுமார், சிவா, ஆறுமுகம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பின்னர் 13.07.2021 ம் தேதி காலை 10.00 மணிக்கு சூலூர் பாலாஜி மருத்துவமனை முன்பு வைத்து சூலூர் காவல் நிலைய குற்ற எண் 720/2021 சட்டப்பிரிவு 392 இதச வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியை கைது செய்து சாட்சிகள் மணிவேல் மற்றும் சசிக்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் விசாரித்து எதிரி எந்த விதமான அச்சுறுத்தலோ, ஆசைவார்த்தைகளோ துன்புறுத்தலோ இல்லாமல் கூறிய ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவு செய்தேன்.

4. பின்னர் எதிரியை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். சாட்சிகள் மணிவேல் மற்றும் சசிக்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துகொண்ட நான் வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்து நீதிமன்றத்திற்கு படிவம் 91 ன் மூலமாக அனுப்பி வைத்தேன். சாட்சிகள் ராஜேந்திரபிரசாத் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் வழக்கின் புலன்விசாரணை முடித்து கடந்த 12.10.2021 ம் தேதி எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணைக்கு போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை மேற்கொள்ளவில்லை

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.08.21 20:04:18 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**